பக்கங்கள் ஆறு    Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 03 வியாழக்கிழமை (17-06-1993) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 201

யுத்தக் கைதி சொல்கிறார்:

## அரசின் உறுதிமொழி உரிய வழிமுறைப்படி வரவேண்டும்

### இல்லையேல் உண்ணாவிரதம் தொடரும்

யாழ்ப்பாணம், ஜூன் 17

விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் யுத்தக் கைதிகளிடம் அவர்கள் இப்போது மேற்கொண்டுவரும் சாகும் வரையான உண்ணா விரதத்தைக் கைவிடுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வால்டர் பெர்னாண்டோ விடுத்த கோரிக்கையை யுத்தக்கைதிகள் நிராகரித்து விட்டனர்.

மேற்படி யுத்தக் கைதிகளை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும்—

அதனால் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு அவர்களைக் கோருமாறும்—

யுத்தக் கைதி ஒருவரின் உறவினருக்கு எழுதிய கடிதத்தில் வால்டர் பெர்னாண்டோ கேட்டிருந்தார்.

ஆனால் வால்டர் பெர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## எழும்பி நடக்க முடியாத நிலையில் உண்ணாவிரதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 17

"சாகும்வரை உண்ணாவிரதத்தை நாம் அரம்பித்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன எம்மில் பலரின் உடல்நிலை மிகவும் பாதிப்படைந்துள்ளது எழும்பி நடக்கவும் இருக்கவும் கஷ்டமாக உள்ளது இன்றைக்கு எல்லோருக்கும் வாந்தியும், வயிற்றோட்டமும் உள்ளது. தலைவலியும் ஏற்பட்டுள்ளது."

இவ்வாறு நேற்றுக் கூறினார் கான்ஸ்டபிள் பி. எஸ். பி. பண்டார சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளின் நிலை குறித்து கூறுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

உண்ணாவிரதமிருக்கும் இராணுவச் சிப்பாயான—காலியைச் சேர்ந்த — உபாலி தங்களது நிலை பற்றிக் கூறுகையில்—

எங்களை விடுவிப்பது குறித்து அரசுக்கு எந்த உணர்வும் ஏற்படவில்லை எனக் கருதுகிறோம். எங்களை விடுவிப்பது அரசின் கடமை— என்றார். (உ-162)

# கொழும்பு முகாமில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகள் உண்ணாவிரதம்

## மீளக்குடியமர மட்டக்களப்புக்கு அனுப்பப்படுவதை ஆட்சேபித்து

கொழும்பு, ஜூன் 17

கொழும்பு அகதி முகாமில் உள்ள சுமார் 500 தமிழ் அகதி குடும்பங்கள், தம்மை மட்டக்களப்புக்கு கூட்டிச்சென்று மீளக்குடியமர்த்தும் திட்டத்தை ஆட்சேபித்து நேற்று உண்ணாவிரதம் ஆரம்பித்தன.

இவர்களை 15 பஸ்களில் மட்டக்களப்புக்கு அனுப்பவும்—

மட்டக்களப்பில் உள்ள நாவலடியில் தற்காலிக முகாம்களை நிறுவி முதலில் அவர்களை அங்கு தங்க வைக்கவும்— அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

இதனை ஆட்சேபித்தே தமிழ் அகதிக் குடும்பங்களின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உறவினர் 78 பேரும் இன்று கொழும்பிலிருந்து புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 17

விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் 39 யுத்தக் கைதிகளின் உறவினர்கள் 78 பேர் கொழும்பிலிருந்து இன்று யாழ்ப்பாணம் புறப்படுகிறார்கள்.

இன்று காலை கொழும்பில் இருந்து வாகனங்கள் மூலம் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளால் திருகோணமலைக்கு அவர்கள் அழைத்துவரப்படுவர். அங்கிருந்து நரோமா கப்பல் மூலம் அவர்கள் நாளை காலை பருத்தித்துறைக்கு அழைத்துவரப்படுவர். அவர்களுடன் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு கொழும்புப் பிரதிநிதி செல்வி எலிசபெத்தும் கூட வருவார்.

உறவினர்கள் நாளையும், நாளை மறுதினமும் யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று யுத்தக்கைதிகளைப் பார்வையிடுவர்.

அவர்கள் சனிக்கிழமை நரோமா மூலம் மீண்டும் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவர். இவர்களை அழைத்து வருவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு யாழ். அதிகாரி திரு. பியட்சுவஸ்ஸர் நேற்று மாலை தெரிவித்தார். (அ 162-3)

## பிரதமர் ராவ் லஞ்சமாக ஒரு கோடி ரூபா பெற்றார்

### ஹர்ஷத் மேத்தா குற்றச்சாட்டு

பம்பாய், ஜூன் 17

பிரதமர் நரசிம்மராவ் ஒரு கோடி ரூபாவை இந்திய நாணயத்தில் லஞ்சமாக பெற்றிருந்தார் என்று நேற்று குற்றஞ்சாட்டப்பட்டதை அடுத்து இந்திய அரசியலில் புதிய நெருக்கடி ஒன்று உருவாகியுள்ளது

பம்பாய் பங்குச் சந்தைப் பேர ஊழலின் பிரதான சந்தேக நபரான ஹர்ஷத் மேத்தாவே இந்த குற்றச்சாட்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### ராவ் மறுப்பு

(புதுடில்லி, ஜூன் 17)

ஹர்ஷத் மேத்தாவிடமிருந்துதாம் ஒருகோடிரூபாவை சட்டவிரோதமாக பெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை இந்தியப் பிரதமர் நரசிம்ராவ் நேற்று மறுத்தார் தாம் பணம் எதனையும் பெறவில்லை என்று அவர் தெரிவித்தார். (இ)

### ராவ் பதவி இழக்கும் அளவுக்கு நெருக்கடி

பம்பாய், ஜூன் 17

பம்பாம் பங்குச் சந்தை பேர ஊழலின் சூத்திரதாரியான ஹர்ஷத் மேதிதாவின் குற்றச்சாட்டு பிரதமர் நரசிம்மராவ் பதவி விலகும் அளவுக்கு காங்கிரஸில் நெருக்கடியை ஏற்படுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா காவல் பணிமனை திறந்து வைக்கப்பட்டது

### 24 மணி நேரம் செயற்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 17

தமிழீழ காவல்துறையின் வவுனியா பிரதேசத்துக்கான காவல் பணிமனை நேற்றுக் காலை 7.20 மணியளவில் புளியங்குளத்தில் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த வைபவ நிகழ்வில் வன்னி மாவட்ட தளபதி திரு. கபிலன் தமிழீழ தேசியக் கொடியையும், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் காவல் துறை கொடியையும் ஏற்றி வைத்தார்கள்.

வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ, வவுனியா கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சிவி. ஆகியோரால் மங்கள விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டன.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## தேசத்துரோகக் குற்றத்துக்கு மரண தண்டனை

யாழ்ப்பாணம், ஜூன் 17

தேசத்துரோகச் செயல்களில் ஈடுபட்ட குற்றத்துக்காக வவுனியா கணேசபுரம் மருக்காரம் பளையைச் சேர்ந்த லட்டு எனப்படும் கிருஷ்ணபிள்ளை இராஜரட்ணம் (வயது 44) என்பவருக்கு விடுதலைப் புலிகளினால் மரண தண்டனை வழங்கப்படுகிறது

கிருஷ்ணபிள்ளை இராஜரட்ணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வவுனியா நகருக்கு லொறிச் சாரதியாகச் சென்று வந்தார் என்றும்—

இவ்வாறு சென்று வந்த போது இராணுவ உளவாளிகளுடன் அவருக்குத் தொடர்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)



கி. இராஜரட்ணம்

**5 ஆம் பக்கத்தில்**

- ★ கூட்டுறவுச்சங்க பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்
- ★ ஆங்கில தேசிய தராதர பத்திர பரீட்சை ஜூலை 31 இல்

## மன்னாரில் குண்டுவீச்சு

மன்னார், ஜூன் 17

ஸ்ரீலங்கா வான்படைக்கு சொந்தமான இரு புக்காரா விமானங்கள் நேற்று முன்தினம் மன்னாரில் குண்டு வீச்சு நடத்தின. காலை 9.50 மணியளவில் இக்குண்டு வீச்சு இடம்பெற்றது. மன்னார் மாவட்டம் முருங்கனில் உள்ள பரிதாரி கண்டல் என்னும் இடத்தைச் சுற்றி வட்டமிட்ட புக்காரா விமானங்கள் மக்கள் குடியிருப்பு பகுதிகள் மீது ஐந்து குண்டுகளை வீசின—

இதனால் குடியிருப்புக்கள் சேதத்திற்கு உள்ளானதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. இதனை அடுத்து முற்பகல் பதினொரு மணியளவில் ஸ்ரீலங்கா வான்படையின் மாசெட்டி ரக குண்டு வீச்சு விமானங்கள் மீண்டும் அதே இடத்தில் குண்டு வீச்சை நடத்தின. அப்போது 4 குண்டுகள் வீசப்பட்டன என்றும்—

சிறுவர் பராமரிப்புப் பாடசாலை சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா - நன்றி

12 - 06 - 1993இல் நடைபெற்ற மணிவிழாவில் கலந்துசொண்ட யாபேருக்கும் நன்றிகள்.

(6264) — லயன் செ. துரைசிங்கம்.

---

யாழ். பல்கலைக்கழக

## வெளிவாரி மாணவர்களுக்கான விரிவுரைகள்

பாடம்: நுண்கலை

விரிவுரையாளர்: செல்வி. எஸ் கலா

**ஆரம்பம்: 19 - 06 - 1993**

விபரங்களுக்கு;

உதவிப் பதிவாளர்,

**பட்டப் படிப்புகள் கல்லூரி**

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5264)

---

## I. A. B. [London]

FINAL STAGE

சனி, ஞாயிறு வகுப்புகள்

**ஆரம்பம்: 19 - 06 - 1993**

முழுக்கட்டணம் - 800/-

தவணை முறையில் செலுத்தலாம்

I. A. B - Foundation & Intemediate

நடைபெறுகின்றன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3RD CROSS STREET JAFFNA.

(சி-5272)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 03 — 03 — 1958

இறப்பு: 18 — 05 — 1993

திருமதி

### கனகரெட்ணம் கமலேஸ்வரி

எங்கள் அருமைக் குலவிளக்கே! குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து, அன்போடும், பண்போடும், பாசத்தோடும் எங்களை வளர்த்தீர்! காலமும், காலனும் உங்களை எம்மிடமிருந்து பிரித்து விட்டாலும், உங்கள் நினைவு என்றென்றும் நிலைத்து நிற்கும். உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

எனது மனைவியின் இறுதிக் கிரியைக்கு சமுகம் அளித்தோருக்கும் உதவி செய்தோருக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும், ஆறுதல் கூறியோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் எமது அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சாந்தி!

அன்னாரின் பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள்,
உறவினர்கள்.

145, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு

(26121)

---

## பாடசாலைகளில்

வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை அதிபர் திரு. சிவஞானபோதன் தலைமையில் நடைபெறும். யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும் பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைசிங்கம், தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் முதல்வர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றார்கள்.

(க-152-161)

o o o

கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். யாழ். கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வராணி மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கிறார்கள் (க)

o o o

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் திருமதி செ. நவரத்தினம் தலைமையில் நடைபெறும். (இ)

### நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்தும் வாராந்தநிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இலங்கை வானொலி மெல்லிசைக் கலைஞர் திரு. இரா. திருஞானசுந்தரத்தின் பண்ணிசையும் மெல்லிசையும் இடம்பெறும்.

### யாழ். - வல்வை பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 17

இன்று வியாழக்கிழமை முதல் வல்வெட்டித்துறை-யாழ்ப்பாணம் 751 பாதையால் - நான்கு மினிபஸ்கள் சேவையில் ஈடுபடும் என்று அறிவிக்கப்படுகிறது.

பயணிகள் நலன் கருதி தினசரி இச் சேவைகள் இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

---

உ

யாழ்ப்பாணம் — வண்ணார்பண்ணை

பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில்

## அலங்கார உற்சவம்

**17 — 06 — 1993 — 27 — 06 — 1993**

தினமும் மாலை 5 30 முதல் 6–30 வரை

பெரியபுராணம் தொடர் விரிவுரை

நிகழ்த்துபவர்: கம்பன் கழக உறுப்பினர்

திரு. ஆறு. திருமுருகன் B. A.

(ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)


★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தர்மகர்த்தா சபை.

யாழ்ப்பாணம். (6263)

---

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 18—06—1949

இறப்பு: 28—06—1992

### அமரர் மாசிலாமணி தேவநேரு

(கிராம அலுவலர், தாவடி)

அன்பின் பிறப்பிடமே
ஆண்டு ஒன்று போனாலும்
இணுவை மக்கள் மனதை விட்டகலாத ஓர் உத்தமனே!
ஈர் ஐந்து ஆண்டுகள் மக்களுக்காக
உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில்
ஊக்கமுடன் உழைத்த உங்களை
எங்கள் இதயத்தில் இருந்து ஒருபோதும்
விலக்க மாட்டோம்.

ஏங்கித் தவிக்கும் உங்கள் மனைவி, பிள்ளைகளுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர்,
செயலக உத்தியோகஸ்தர்கள்,
கிராம அலுவலர்கள்.
வெளிக்கள உத்தியோகஸ்தர்கள்

(26126)

---

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

சர்வதேச கூட்டுறவு

## தினவிழா போட்டிகள் 1993

**பின்வரும் விவரப்படி கோட்ட மட்டங்களில் போட்டிகள் நடைபெறும்**

1. 19 - 6 - 93 அங்கத்தவர் பணியாளர் போட்டிகள்

| | | |
|---|---|---|
| அ. கட்டுரைப் போட்டி | — | மு. ப. 9.00 — 10.00 மணி வரை |
| ஆ. பேச்சுப் போட்டி | — | மு. ப. 10 00 தொடக்கம் |
| இ. வினாடி வினா போட்டி | — | பி. ப. 1.00 தொடக்கம் |

| கோட்டம் | | போட்டி நடைபெறும் பாட்சாலை |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணம், தீவகம் | — | வேம்படி மகளிர் கல்லூரி |
| 2 தென்மராட்சி | — | றிபேர்க் கல்லூரி |
| 3. வடமராட்சி | — | திரு இருதயக் கல்லூரி, வதிரி |
| 4. வலி. கிழக்கு | — | மருதனார்மடம்' இராமநாதன் கல்லூரி |
| 5. வலி. மேற்கு | — | மானிப்பாய் இந்துக் கல்லூரி |

2. 20 - 6 - 93 பாடசாலை மாணவர் போட்டிகள்

| | | |
|---|---|---|
| அ. கட்டுரைப் போட்டி | — | மு. ப. 9.00 — 10.00 மணி வரை |
| ஆ. பேச்சுப் போட்டி | — | மு. ப. 10.00 மணி தொடக்கம் |

| கோட்டம் | | போட்டி நடைபெறும் பாடசாலை |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணம், தீவகம் | — | வேம்படி மகளிர் கல்லூரி |
| 2. தென்மராட்சி | — | றிபேர்க் கல்லூரி |
| 3 வடமராட்சி | — | நெல்லியடி மகா வித்தியாலயம் |
| 4. பண்டத்தரிப்பு | — | மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 5. மருதனார்மடம் | — | மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி |

போட்டியாளர்களுக்கு தனிப்பட்ட அழைப்பு அனுப்பப்படமாட்டாது. போட்டியில் பங்குபற்றும் அங்கத்தவர், பணியாளர், பாடசாலை மாணவர்கள் அனைவரும் போட்டியில் தவறாது சமுகமளித்து பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சு. சிவசுப்பிரமணியம்
செயலாளர்

(சி 5274)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் ஐயப்பா

# சண்டிலிப்பாய், வேவிற்பதி ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டச் சிறப்புமலர்


**17-06-1993**

இரதோற்சவம் – 18 - 06 - 93 வெள்ளி காலை 8-30

# குளக்கோட்டு மன்னன் அமைத்த திருத்தலம்

''வேவிற்குளமாம் பெருத்த மணற்றிடல் சோலைகளாம் நாவிநுழையாத சோலைக்காட்டினில் வந்தனனே''

எனக்கூறப்பட்டவாறு பெரும் சோலைகளுக்கு மத்தியில் எழுந்தருளியிருக்கும் சண்டிலிப்பாய் வேவிற்குளம் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் பெருமானுக்கு அமைக்கப்பட்ட புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா இன்று மிகக் கோலாகலமாக நடைபெறுகின்றது. அரசு, ஆல், மகிழ், கடம்பு, வேம்பு புன்னை, மருது எனப்பல வேறு விருட்சங்களுடன் வயலும் வயல் சார்ந்த இடமுமாக இயற்கையெழில் கொஞ்சும் அழகு நிறைந்த சூழலில் அமைந்துள்ள இவ்வாலயம் பெரும் வரலாற்றுச் சிறப்புமிக்கது குளக்கோட்டு மன்னனால் மணற்றிட்டியில் அரசமரத்தின்கீழ் அமைக்கப்பட்ட இத் தலம் இவ்வூர் மக்களின் குல தெய்வமாக மிளிர்கின்றது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பட்ட ஆலயங்களில் இதுவுமொன்றாகும். அந் நேரத்தில் ஐயனார் விக்கிரகமும் காணாமல் போய்விட்டது. சில காலத்தில் இங்கு வாழ்ந்த குருக்கள் ஒருவருக்கு ஐயனார் இருக்குமிடத்தை கனவில் தெரியப்படுத்தினார். அதன்



படி ஐயனார் விக்கிரகம் ஆலயத்துக்கு அருகில் உள்ள மரங்கள் அடர்ந்த வேவிற்குளம் என்ற குளத்திலிருந்து மீட்கப்பட்டு, மணற்றிடலில் வைத்து பூசிக்கப்பட்டது.

சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு சமீபமாக யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதான வீதியில் சிறிது உட்புறமாக இவ்வாலயம் அமைந்துள்ளது ஒல்லாந்தரால் அழிக்கப்பட்ட ஆலயம் 1790 ஆம் ஆண்டிலே திருவிளங்க முதலியார் என்பவரால் அடியார்களின் உதவியுடன் புதுப்பிக்கப்பட்டது. தற்போது சிறப்பான முறையில் நித்திய, நைமித்தியகிரியைகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஆனி மாத அமாவாசையை தீர்த்தமாகக் கொண்டு மஹோற்சவமும் நடைபெறுகிறது. தை மாத மகரஜோதிப்பெருவிழா மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. ஈழத்துச் சிதம்பரத்தில் உள்ளவாறு பூரணை, புஷ்கலை சமேதராக ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் இங்கும் காட்சியளிக்கின்றார். இந்தியாவில் சபரி மலையில் ஸ்ரீ ஐயப்பனை தரிசிக்க உலகெங்குமுள்ள பக்தர்கள் படையெடுக்கின்றனர். அங்கெல்லாம் செல்லமுடியாத நம்நாட்டு அடியார்கள் தம் வழிபாடுகளை மேற்கொள்ள வேவிற்பதி ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்திற்கு அதிகளவில் வருகின்றார்கள்.

இன்றைய தினம் வெள்ளோட்டம் விடப்படும் புதிய சித்திரத்தேர் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தினரால் சிற்பக்கலைஞர் திரு. ஆ. சீவரத்தினம் தலைமையில் உருவாக்கப்பட்டதாகும். நாளைய தினம் இரதோற்சவம் காலை 8-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

துன்பங்களும், துயரங்களும் சூழ்ந்துள்ள இக்காலகட்டத்தில் எம்மையும் எம்மைச் சார்ந்தவர்களையும் காப்பாற்ற காக்கும் தெய்வமான ஐயனார் வழிபாடு சிறந்ததாகும். ★

## மஹோற்சவ குரு வேத வித்தகர் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆசி

அருள் மயமான இறைவன் அண்டசராசரங்களை எல்லாம் தேராக்கி தான் நடுவிலிருந்து நடாத்துவானாக இருக்கின்றார் என்று சூரிய புராணம் கூறுகிறது. 'ரதேப்பியகா' என்று 'தேர்வடிவாகவும், 'ரதிபதீப்பியகா' என்று தேர்த்தலைவனாகவும் இறைவனை இருக்கு வேதம் விபரிக்கிறது.

அனைத்து மக்களும் ஒருமனதுடன் ஒன்றுகூடி அசைப்பது தேர் உலாவாம். அதனாலேயே திருவிழாக்களில் தேர்த்திருவிழா சிறப்புப் பெறுகிறது. பழைமையும் அருட்செறிவும் நிறைந்த சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனாருக்கு ஒருவருட காலத்தில் அழகும், அமைவும் கூடிய சித்திரத்தேர் அமைந்திருப்பது அனைவருக்கும் பெருமைக்குரியதாகும். தேரை சிற்ப சாஸ்திர முறைமைகளுக்கு ஏற்ப வடிவமைத்த புகழ் பெற்ற ஸ்தபதியார் திரு. ஆ. சீவரத்தினம் ஆசாரியார் சிரமமான காலத்திலும் அரும்பாடுபட்ட தேர்திருப்பணிச்சபையார் பொருளுதவியும், ஊக்கமும் தந்த சைவப் பெருமக்கள் அனைவருக்கும் இந்தத் தேர் உலாவின் மூலம் ஐயனார் பெருமானின் திருவருள் நிறைந்த சகல நன்மையும் உண்டாகப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்

## சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசி

இயற்கை எழில் கொஞ்சும் இடத்தில் இன்னருளாட்சி செய்துவரும் இவ்வாலயத்தில் மிகக்குறுகிய காலத்தில் சிறந்த சித்திரத் தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நிகழும் ஆனந்தத்தை அடியார்களுக்கு வழங்கிய சீவரத்தினம் ஸ்தபதியார் அவர்களும் பணியினை முன்னெடுத்த அடியார்களும் போற்றுதற்குரியவர்கள். மிகவும் இக்கட்டான காலகட்டத்திலும் தேர் பூர்த்தியானதை மையமாக வைத்தே நாம் இவ்வாலயத்தின் தெய்வ அருள் சிறப்பை அறியலாம். இத் தொண்டில் பங்குகொண்ட எல்லோருக்கும் ஐயப்பன் அருள் கிடைக்க வாழ்த்துகிறோம்.


**ஸ்ரீ ஐயப்பன் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைப்பதாக**

| | | |
|---|---|---|
| சுந்தர்சன்<br>மானிப்பாய். | தெல்லிப்பழை ப. நோ. கூ. ச.<br>(வரைவுள்ளது)<br>தெல்லிப்பழை. மானிப்பாய் (தற்காலிகம்) | மானிப்பாய் கோவிற்பற்று<br>பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்<br>மானிப்பாய் |
| மணிமேகன் சனசமூக நிலையம்<br>சண்டிலிப்பாய். | சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்<br>இந்து இளைஞர் மன்றம்<br>சண்டிலிப்பாய். | க. நடராசா<br>இராஜன் சைக்கிள் ஸ்ரோர்<br>மானிப்பாய். |

விளம்பர இலக்கம் (26123)


# கொட்டாஞ்சேனையில் 4 தமிழர்கள் கைது

கொழும்பு, ஜூன் 17

கடந்த வாரம் கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்ட பொலீஸார் அங்கிருந்த நான்கு தமிழர்களைக் கைது செய்தனர்.

அவர்களில் இருவர் தீவிரவாதிகள் என்றும் சொல்லப்பட்டது

இக் கைது பற்றி அடுத்த நாள் நடந்த உயர் நிலை பொலீஸ் மாநாடு ஒன்றில் ஆராயப்பட்டது.

அரசுக்கு எதிராக பாரிய நகரப்புற கெரில்லாத் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக கொழும்பில் தாக்குதல் பிரிவு ஒன்றைக் கட்டி எழுப்புவதில் விடுதலைப்புலிகள் முயற்சிப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் நம்புகின்றனர்.

'அதி உஷார் நிலையில் நாம் உள்ளோம்' — என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(ஓ-எ)

# மலிவுவிலையில் பொருள்கள் சங்க கடைகளில் விநியோகம்

## ரவை ரூ.20, பருப்பு ரூ.55, கடலை ரூ.47

யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் 'அ', 'உ' உலர் உணவு அட்டைகளுக்கும், இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு முத்திரைகளுக்கும் கிலோ 27 ரூபா 50 சதம் வீதம் 2 கிலோ சீனி விநியோகம் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேற்படி சங்கக் கிளைகளில் ரவை ரூபா 20, பயறு ரூபா 27, மைசூர் பருப்பு ரூபா 55, சிந்தாமணிக் கடலை ரூபா 47, வெள்ளைப்பூடு ரூபா 70. தேயிலை ரூபா 74, லக்ஸ் ரூபா 11, சன்லைற் ரூபா 9 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வறுமை நிவாரண முத்திரைகளுக்கும், இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு முத்திரைகளுக்கும், மாணவ உணவு முத்திரைகளுக்கும் ஒரே சமயம் விநியோகம் இடம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-162)

## கொழும்பு நகருக்குள் புகமுயற்சி

# 'டெலிகா' வான் ஒன்றில் வந்த 6 தமிழ் இளைஞர்கள் கைது!

### மதுரையில் பயிற்சி பெற்றவர்களாம்

கொழும்பு, ஜூன் 17

கொழும்பு நகரினுள் ''டெலிகா'' வான் ஒன்றில் நுழைய முயற்சித்த ஆறு தமிழ் இளைஞர்களை பொலீஸார் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

உயர் நிலை பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

பொலீஸார் நடத்திய விசாரணையின் போது, இந்த ஆறு பேரும் தாங்கள் மதுரையில் உள்ள விசேஷ முகாமில் இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் என்பதை ஒப்புக் கொண்டனர் என்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

இவர்கள் கடந்த பெப்ரவரியில் இலங்கை திரும்பினார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[illegible] பெயர்களை வெளியிட விரும்பவில்லை என்று சிரேஷ்ட பொலீஸ் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

நன்றாகப் பயிற்சி பெற்ற சுமார் முப்பது விடுதலைப் புலிகள் கொழும்பு நகருக்கு வந்துள்ளனர் என்றும் —

அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்துவதே அவர்களின் திட்டம் என்றும் —

விசாரணைகளில் இருந்து இது தெரிய வந்ததாகவும் அப்பொலீஸ் அதிகாரி கூறினார்.

புலனாய்வு அறிக்கைகளின் படி—

அரசுத் தலைவர்கள், மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்த இலக்கு வைக்கப்பட்டுள்ளது என்றும் ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது.

பேலியகொடவுக்கு அருகில் உள்ள பொலீஸ் சோதனைச் சாவடி ஒன்றில் வைத்தே ஆறு தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயணம் செய்த வாகனத்தில் வெடிப்பொருள்கள், வயர்கள், பற்றரிகள், கைக்கடிகாரங்கள் ஆகியன இருந்தன என்று விசாரணை நடத்தும் பொலீஸாரில் ஒருவர் கூறினார்.

இந்த ஆறு பேரும் தடுப்புக் காவல் உத்தரவின் மீது தடுத்து வைக்கப்பட்டு, விசேட பொலீஸ் குழு ஒன்றினால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் கூறப்பட்டது

[ஓ-எ]

## கலந்துரையாடல்

உள்ளூர் நூல் வெளியீட்டு ஊக்குவிப்பு அமைப்பு நூல் விற்பனவு நிலையம் தொடங்குவது சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இக்கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். [ஓ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## இடமாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

## குளிர்பானங்கள்

Sunrise குளிர்பானங்கள், கோடியல்கள், சுத்தமானவை. சுவையானவை பருகிக் களிப்படைவீர். தயாரிப்பு: விநியோகம்: Siva Industries, 85/3, Colombogam Road, Chundikuli. (சி-5307)

## இலவச திருமண சேவை

வயது 31, தொழில்நுட்பவியல் படித்தவர், விசாகம், செவ்வாயற்ற ஜேர்மன் விசாவுடையவருக்கு படித்த மணப்பெண் தேவை. Sponsor செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (26095)

## புலமைப் பரிசில் பரீட்சை

சிறந்த பெறுபேற்றை வருடா வருடம் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் ஆண்டு-5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் 20-06-1993 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26122)

## ஓவியப் போட்டி

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் இணை அமைப்பான சன்மார்க்க நுண்கலை மன்றம் அதன் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே ஓவியப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-152)

## இலவச பாமசி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் இலவச பாமசி வகுப்புகளை நடத்தவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பில் மருந்தகங்களில் வேலை செய்பவர்களும் ஏனையோரும் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இலவச பாமசி வகுப்பிற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி சங்கப் பணிமனையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## கலை, வர்த்தக கல்லூரி

**C C A**

**A/L 94**

மீட்டல் வகுப்பு

1 வருடம்

முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்

எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்:
**20 — 06 — 1993**
பி. ப. 1-00மணி

- நிர்வாகி.

(சி/5314)

---

உ

கோண்டாவில் கிழக்கு

## ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்

## ★ வருடாந்த மஹோற்சவம் ★

**17 — 06 — 1993 — 28 — 06 — 1993**

| | | |
|---|---|---|
| 17-06-1993 | வியாழன் | கொடியேற்றம் பகல் 12 00 மணி |
| 22-06-1993 | செவ்வாய் | பூச்சப்பறம் மாலை 5-30 மணி |
| 23-06-1993 | புதன் | கைலாச வாகனம் இரவு 8-00 மணி |
| 24-06-1993 | வியாழன் | சப்பறம் இரவு 8-00 மணி |
| 25-06-1993 | வெள்ளி | இரதோற்சவம் காலை 10-00 மணி |
| 26-06-1993 | சனி | தீர்த்தோற்சவம் காலை 9-00 மணி |
| 27-06-1993 | ஞாயிறு | திருக்கல்யாண உற்சவம் (முருகப் பெருமான்) மாலை 4-00 மணி |
| 28-06-1993 | திங்கள் | வைரவர் உற்சவம் மாலை 5-30 மணி |

**17 — 06 — 1993** முதல் **28 — 06 — 1993** வரை
தினமும் மாலை 6-45 மணிக்கு

### "மகாபாரதத் தொடர்"

விரிவுரை நடத்தப்படும்

நிகழ்த்துபவர்:
திரு இ. ஜெயராஜ் அவர்கள்
(கம்பன் கழக அமைப்பாளர்)

குறிப்பு:
23-06-1993 புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு புதிதாகச் செய்யப்பட்ட சப்பறத்தின் வெள்ளோட்ட விழா நடைபெறும்.

ஆலய நம்பிக்கைப்-
பொறுப்பாளர் சபை.

(26109)

---

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு

## ஞான வீரபத்திரர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

**12 — 06 — 1993 — 21 — 06 — 1993**

தினமும் மாலை 7.00 முதல் 8.30 வரை

கம்பராமாயணம்
(தொடர் விரிவுரை)

நிகழ்த்துபவர்:
திரு. திருநந்தகுமார் அவர்கள்
(அகில இலங்கை கம்பன்கழகத் தலைவர் - பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)


★ அனைவரையும் அன்புடன் பேருரையில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

— ஆலய பரிபாலன சபையினர்.

(26117)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
**17-10-1975**

●

தாயக மண்ணில்:
**17-06-1991**

## இளம்புலி கீதா

[செல்வி தர்சினி திருச்செல்வம்]

திதி: வளர்பிறை சஷ்டி **25-06-1993**

எரிகின்ற தாயகத்தில் பசுந்தளிராய் உதித்தவளே!
எரிமலையாய் நீயெழுந்தாய் எதிரிகளின் மத்தியிலே!
இடைநடுவில் வீழ்ந்ததுமேன் எம் இதயக் கோயிலிலே
குடிகொண்ட இளந்தளிரே!
உமக்கு எங்கள் அஞ்சலிகள்!

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!

அப்பா, அம்மா, அண்ணா, அக்கா,
மற்றும் உறவினர், நண்பர்கள்.

தற்போதைய விலாசம்:
பறாளாய் றோட்,
சுழிபுரம்.

(26105)

---

உ

கணபதி துணை

சிறுப்பிட்டி

## செல்லப் பிள்ளையார் கோவில்

## 9ஆம் நாள்

(18 — 06 — 1993 வெள்ளிக்கிழமை)

## அபிஷேக தினவிழா

காலை 11 மணியளவில்
அபிஷேக ஆராதனை

பகல் 3 மணியளவில்
மேளக்கச்சேரி

5 30 தொடக்கம் 6-30 வரை
கதாப்பிரசங்கம்

இரவு 6-30 தொடக்கம்
தீப ஆராதனையும் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட திருவுலாவும் நடைபெறும்.

பின்பு 9-30 தொடக்கம் 12மணி வரை
இன்னிசை வேந்தர் திரு. பொன். சுந்தரலிங்கம் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி

12 30 முதல் 3மணி வரைக்கும்
பார்வதி சிவபாதம் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி

**மேளக்கச்சேரி விவரம்:**

N. R கோவிந்தசாமி புதல்வர்- இரத்தினகுமார், வாகீஸ்வரன் குழுவினர்
M. K. பத்மநாதன் குழுவினர்
K. M. பஞ்சாபிகேசன் குழுவினர்
S. சிதம்பரநாதன் குழுவினர்
கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர்
K. R. சுந்தரமூர்த்தி குழுவினர்
N. R. S. ரவீந்திரன், சுதாகரன் குழுவினர்
K. உதயநாதன் குழுவினர்
தனித்தவில்: K. R. புண்ணியமூர்த்தி
K. நித்தியானந்தன்

ஒளி — மனோ, கோப்பாய்.
ஒலி — நாதன், சிறுப்பிட்டி.

விசேட சாத்துப்படி — திரு. சிவராசா, புத்தூர்
மண்டப அலங்காரம் — இந்துதாசன், குரும்பசிட்டி

அத்தருணம் அடியார்கள், அன்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு எம்பெருமான் அருளைப் பெற வருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
9ஆம் நாள் அபிஷேக விழா
உபயகாரர்கள்.

சிறுப்பிட்டி (26119)

---

## முக்கிய அறிவித்தல்

நாங்கள் நேரடியாக வந்து கேட்காத எப்பொருள்களையும் எங்கள் பெயரைக் கூறிவரும் எவரிடமும் கொடுக்கவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

**அண்ணா தொழிலகம்,**
இணுவில்.

(26120)

---

# FIRST ANNIVERSARY REMEMBRANCE

Mrs. Rebecca Maturamany Lawrence
(Retired Teacher St. Patrick's College Jaffna)



பிறப்பு:
**10 — 03 — 1902**

அழைப்பு:
**17 — 06 — 1992**

அன்னாரின் சேவை தனித்துவமும் மகிழ்ச்சியுமானது. அவரின் ஆத்மா சாந்தி பெறுவதாக.

Four Score and Eleven years was your Term of office. Longevity is the reward by God to those who Served Him well and True. Your Service is remembered with gratitude.

C. Lawrence Senathirajah &
Family Members.

41, Eachamoddai Road,
Chundikuli. (6258)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனித உரிமைகளுக்கு புதிய அர்த்தங்களா?

மனித உரிமைகளைப் பேணுவது என்ற பெயரில், ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் மேற்கு நாடுகள் தலையிட்டு வருவதாக சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

மனித உரிமைகளைப் பேணுவதற்கான புதிய நகல் சாசனம் ஒன்றைத் தயாரிப்பதற்காக வியன்னாவில் மனித உரிமைகள் உலக மாநாடு கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. உலகின் 180 நாடுகளைச் சேர்ந்த ஐயாயிரம் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள். இனப்பாகுபாட்டை ஒழித்தல், சிறுபான்மை இனங்களைப் பாதுகாத்தல், சித்திரவதையைத் தடுத்தல், பெண்களுக்கு உரிய அந்தஸ்து வழங்குதல் ஆகிய நான்கு அம்சங்களுக்கும் முக்கிய இடமளிக்கும் வகையில் புதிய நகல் திட்டம் தயாராகும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த மாநாட்டில் மனித உரிமைகள் எவை, அவற்றைப் பேணுவது எப்படி, அதற்கான வரன்முறைகள் எவை என்பன போன்ற விடயங்களில் பெரும் கருத்து முரண்பாடுகளும் மோதல்களும் ஆசிய நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையில் தோன்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் ஆரம்பமே இரண்டாம் நாள் நிகழ்வின்போது சீனா சுமத்திய குற்றச்சாட்டும், மூன்றாம் நாள் நிகழ்வின்போது அமெரிக்கா ஆசிய நாடுகளிலேயே அதிகளவில் மனித உரிமைகள் மீறப்படுவதாக பல நாடுகளின் பெயர்களைக் குறிப்பிட்டு விரல் சுட்டியதுமாகும்.

கடந்த மார்ச் – ஏப்ரல் காலப் பகுதியில் பாங்கொக்கில் 49 ஆசிய நாடுகள் சேர்ந்து தங்களுக்கென மனித உரிமைகள் கோட்பாடு ஒன்றை வகுத்தன.

புதிய உலகப் போக்குக்கு ஏற்பவும், மனித உரிமைகளைப் பேணுதல் என்ற போர்வையில் சில செல்வாக்குள்ள நாடுகள் ஏனைய நாடுகளின் உள்விவகாரத்தி அரசியல், பொருளாதார நோக்கோடு தலையிடுவதை தடுக்கும் விதத்திலும் ஆசிய நாடுகளின் மனித உரிமைக் கோட்பாடு அமைந்திருக்கிறது.

எப்படியோ மனித உரிமை மீறல்கள் உலகம் எங்கும் பரவலாக நடைபெற்று வருகின்றன. ஆனால் மனித உரிமை பேணலை அபிவிருத்திக்கான நிபந்தனையாகப் பார்க்கும் மேற்கு நாடுகளின் போக்கு வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்தி அடைவதற்கான உரிமையை மறுப்பதாகும்.

அதேவேளை—

அரசாங்கங்கள் தத்தமது நாட்டில் தாம் நிகழ்த்தும் மனித உரிமை மீறல்களை மூடி மறைக்க அனுமதிக்க இயலாது. அவற்றை உலகத்துக்கு பகிரங்கப்படுத்தி ஏதோ ஒரு வகையில் தண்டனை வழங்கியே ஆகவேண்டும். இல்லையேல் ஸ்ரீலங்கா போன்ற நாடுகள் மனித உரிமைகளை துச்சமாக மதித்து மக்களை மிகக் கொடூரமாக இம்சைப்படுத்திவிடும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் மனித உரிமை மீறல்கள் வெறுமனே தனியான மயப்படுத்தப்பட்ட ரீதியில் மதிப்பீடு செய்யப்பட்டால் மட்டும் போதாது. இனப்பாகுபாட்டை ஒழித்தல், சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற பரந்த வட்டங்களுக்கு மனித உரிமை மீறல் மதிப்பீடு கொண்டு செல்லப்பட வேண்டும்.

இனப்பாகுபாடு காட்டும் ஒரு நாட்டை, சிறுபான்மை இன மக்களின் சுயநிர்ணய உரிமை உட்பட்ட மனித உரிமைகளை வழங்காத ஒருநாட்டை தண்டிக்கும் வகையில் மனித உரிமை சாசனம் திருத்தப்பட வேண்டும். அப்போதே ஸ்ரீலங்கா போன்ற நாடுகள் மனித உரிமைகளை பற்றி அக்கறை கொள்ளத் தூண்டப்படும்.

## ஆலயங்களில்

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் சிவபெருமானின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இம்மாதம் 25 ஆம் திகதி தோத் திருவிழாவும், ஆனி உத்தர தினமான 26 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

o o o

வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேதகாசிவிசுவநாதர் சிவன்கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இம்மாதம் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் ஆனி உத்தரத்தி லன்று தீர்த்தோற்சவமும், நடேசர் திருநடனக் காட்சியும் இடம் பெறும். (அ)

o o o

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணிக்கு நிகழும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (அ)

o o o

யாழ். கலட்டி ஸ்ரீவீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

தேர்த்திருவிழா 25 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் அடுத்த நாளும் நடைபெறும்.

o o o

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜ பெருமாள் தேவஸ்தான மகாசங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். (அ)

o o o

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 25 ஆம் திகதியன்று தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். இன்று முதல் 26 ஆம் திகதி வரை தினமும் இரவு 7 மணிக்கு ''வாகீசகலாநிதி'' கனகசபாபதி நாகேஸ்வரனின் தொடர் சமயச் சொற்பொழிவு இடம் பெறும். (அ)

o o o

அராலி வடக்கு ஸ்ரீ நடராசப் பெருமான் தேவஸ்தானத்தின் திருவிளக்கு சந்நிதான ஆனி திருமஞ்சன அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும். 25 ஆம் திகதி வெள்ளி காலை தேர்த் திருவிழாவும் 26 ஆம் திகதி அதி காலை ஆனி உத்தர தீர்த்தமும் இடம்பெறும். (க)

o o o

அராலி மேற்கு சந்த ஞானியார் ஆலய ஸ்ரீசிவகாமசவுந்தரி சமேத சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகிறது ரதோற்சவம் 25 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 26 ஆம் திகதியும் நடைபெறும். [க-12]

o o o

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 11-30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. ரதோற்சவம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் தீர்த்தத் திருவிழா 26ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும்.

## ஆங்கில தேசிய தராதர பரீட்சை ஜூலை 31 இல்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடத்தும் ஆங்கில தேசிய தராதரப் பத்திரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை ஜூலை மாதம் 31 ஆம் திகதி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட 16 நகரங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 29 ஆம் திகதி வரை இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என்று பரீட்சை ஆணையாளர் ஏ. வெத்தமுல்ல தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கு விண்ணப்பிப்பது குறித்து பரீட்சை ஆணையாளரின் அறிவித்தலையும், மாதிரி விண்ணப்பப் படிவத்தையும்—

இல: 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். (அ)

அராலிச் சம்பவம்:

# கண்ணிவெடி துண்டுகள் லண்டனுக்கு அனுப்பப்படும்

கொழும்பு, ஜூன் 17

அராலி கண்ணிவெடித் தாக்குதலில் வெடித்த கண்ணிவெடியின் துண்டுகளை பிரிட்டிஷ் வெடிகுண்டு நிபுணர் ஜே. ஆர். வியட்டினால் பரிசோதனை செய்யப்படுவதற்காக லண்டனுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

அராலித்தாக்குதல் குறித்து விசாரணை நடத்திவரும் காமன்வெல்த் ஆணைக்குழுவின் தலைவரான நீதியரசர் ஒஸ்டின் நேபெஹேரா முன்கண்டவாறு தெரிவித்தார்.

பிரிட்டிஷ் வெடிகுண்டு நிபுணர் திரு. வியட்டின் சாட்சியத்தைப் பதிவு செய்து கொள்வதற்காக காமன்வெல்த் விசாரணை ஆணைக்குழு தற்பொழுது லண்டன் சென்றிருப்பது தெரிந்ததே. (ஒ-எ)

## சைக்கிள் உதிரிப்பாகங்கள்

(யாழ்ப்பாணம் ஜூன், 17

குடாநாட்டுக்கு சைக்கிள் உதிரிப்பாகங்கள் பெருமளவில் எடுத்து வரப்பட்டிருக்கின்றன. கடந்த வாரமும் உதிரிப்பாகங்கள் கிளாலியூடாக யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன. (ஒ-117)

## லலித் கொலைச் சம்பவம்; மேலும் 9 பேர் கைதாம்

கொழும்பு, ஜூன் 17

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொலை செய்யப்பட்டதை அடுத்து தலைமறைவாகிவிட்ட ஐயாக்கண்ணு சத்தியவேல், கெனசல்யன் என்றழைக்கப்படும் பேதுருப்பிள்ளை ஜெபநேசன் ஆகியோரின் நெருங்கிய சகாக்கள் என்று கருதப்படும் 9 பேரை குற்றப்புலனாய்வுப் பணியகத்தினர் கைது செய்துள்ளனர்.

அத்துலத் முதலியை கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் சுந்தையா ரகுநாதனும் தலைமறைவானவர்களில் ஒருவரான சத்தியவேலும் புறக்கோட்டையில் ரேடியோ-டி. வி. திருத்தும் நிலையம் ஒன்றை நடத்தி வந்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

இக்கொலை குறித்து பொதுமக்கள் முக்கிய துப்புகளைத் தந்துள்ளனர் என்றும்—

இக்கொலைச் சதி பற்றிய மர்மத்தை இத்துப்புகள் வெளிப்படுத்த உதவக்கூடும் என்றும் பொலீஸார் கூறினார்கள். (ஒ-எ)

யாழ். பிரதான வீதி

## மக்கள் வங்கிக் கிளை மீண்டும் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 17

மக்கள் வங்கியின் யாழ் பிரதான வீதிக்கிளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தமது பழைய இடத்தில் இயக்கவிருக்கிறது.

இதுவரை காலமும் ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த இந்தக்கிளை பிரதான வீதியில் முன்னர் இயங்கிவந்த சொந்த கட்டடத்துக்கு மாற்றப்படவிருக்கிறது.

கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இக்கட்டடம் சேதமடைந்ததும்—

அதைத் தொடர்ந்து வங்கிக் கிளை ஸ்ரான்லி வீதிக்கு மாற்றப்பட்டிருந்ததும் தெரிந்தவையே. (ஒ-3)

## நரசிம்மராவை ரணில் சந்தித்துப் பேசுவார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புதுடில்லியில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்த உள்ளார்.

இச்சந்திப்பு இம்மாதம் 22 ஆம் திகதி இடம் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் நடைபெறும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றுள்ள திரு. ரணில் விக்கிரமசிங்கா கொழும்பு திரும்பும் வழியில் இம்மாதம் 22 ஆம் திகதி இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு விஜயம் செய்வார் என்றும்—

அப்போது இரு நாடுகளின் பிரதமர்களும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம் மாதம் 23 ஆம் திகதி பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா கொழும்பு திரும்புகின்றார். (ஒ-எ)

## விளையாட்டு நிகழ்வுகள்

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவில் யாழ். பல்கலைக் கழகம் நடத்தி வரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

மாலை 4 மணிக்கு நடைபெறும் பெண்கள் பிரிவு அரையிறுதியாட்டத்தில் யுத்காமல் அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதும்.

மாலை 4 45 மணிக்கு நடைபெறும் ஆண்கள் பிரிவு அரையிறுதியாட்டத்தில் சென்ற லைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து பற்றிஷியன் அணி மோதும்.

புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் சழக மைதானத்தில் நடத்தும் 26 ஆவது உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு குருநகர் தொடர்மாடி அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் அணி மோதும். (உ)

## கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 17

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு, கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்,

விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படும் பகுதியில் ஆகக் குறைந்தது 3 வருடங்கள் வசித்திருக்க வேண்டும் என்றும்—

இதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு-கிழக்கு மாகாணசபை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் போட்டிப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும்—என்றும், விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் பொதுப் பரீட்சை நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்பிப்பதற்கு தேவையான தகுதிகள் மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவற்றை இல. 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். (ஒ-3)

சர்வசன வாக்கெடுப்புக்கு முன்

## கிழக்கிலிருந்து புலிகளை வெளியேற்ற முடியுமாம்

### தெரிவுக்குழுவிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஏதுவாக அங்கிருந்து நான்கு மாதங்களுக்கு இடையில் விடுதலைப் புலிகளை வெளியேற்றும் பலமும் திறமையும் இராணுவத்துக்கு இருப்பதாக இராணுவத் தலைமைப்பீடம், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவிடம் உறுதியளித்துள்ளது.

அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு இடையில் இப்பணியை முடித்துவிட முடியும் என்று பாதுகாப்பு உயர்பீடம் நம்பிக்கை வெளியிட்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில், கிழக்கு மாகாணத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவும் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவிடம் இது போன்ற உறுதிமொழி ஒன்றை அளித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. (ஒ-எ)

## ஷெல் தாக்குதல்

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 5 30 மணி முதல் பொன்னாலை மூளாய்ப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதவேளை ஊர்காவற்றுறை தம்பாட்டி கடற்பிராந்தியத்தில் இருந்தும் கடற்படையினர் இக்கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தினர். (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மக்கள் வங்கி

# புதுக்குடியிருப்பில் நேற்று திறந்து வைக்கப்பட்டது

முல்லைத்தீவு மக்கள் வங்கிக்கிளை நேற்று முதல் புதுக்குடியிருப்பில் இயங்க ஆரம்பித்தது.

மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் திரு. எஸ். அருளானந்தன் வங்கிக் கிளையை திறந்து வைத்தார்.

வங்கிக்கு தேவையான ஆவணங்கள் கொழும்பில் இருந்து கடந்தவாரம் எடுத்துவரப்பட்டன.

முல்லைத்தீவில் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றதை அடுத்து மக்கள் வங்கிக்கிளை கடந்த சிலகாலமாக இயங்காதிருந்தது தெரிந்ததே.

## தேசத்துரோகக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிருஷ்ணபிள்ளை இராஜரட்ணம் மீதான குற்றச்சாட்டுக்கள் வருமாறு:-

1. இத்தொடர்புகளின் மூலம் சில தகவல்களை எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள்ளிருந்து வழங்கிவந்துள்ளார். எமது அமைப்பைப் பற்றிய இரகசிய தகவல்களையும், எமது முகாம் அமைவிடங்களின் சரியான நிலைகளையும், எமது தாக்குதற் திட்டத்தின் முன்னேற்பாடுகளையும் வழங்கினார்.

2. எதிரியுடனான தாக்குதலின்போது எமது தரப்பில் ஏற்பட்ட இழப்பு, சேதவிவரங்கள் போன்றவற்றையும் வழங்கினார்

3. எமது முகாம்கள் பற்றி விமானப்படையின் விமானத் தாக்குதல்களுக்கு சரியான இலக்குகளைக் குறித்துக் கொடுத்தபின், முகாம் தாக்கப்பட்டதும் அத்தாக்குதலின் சரியான விவரத்தையும் கொடுத்துள்ளார்.

4. இராணுவத்தினர் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் முன்னேறுவதற்காக எமது நிலைகளையும், நிலைப்பாடுகளையும் இராணுவ உளவாளிகள் அவதானித்து வரும்படி கேட்டபோது அவற்றை எமது பகுதிக்குள் அவதானித்து அது பற்றி தெளிவான தகவல்களை வழங்கி வந்துள்ளார். இதற்குப் பிரதியுபகாரமாக இராணுவ உளவாளிகளுடன் அந்நியோன்னியமாக இருந்து மது அருந்தியதுடன் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தனது மருமகன் முறையான ஒருவரை தனது சலுகை மூலம் விடுவித்துள்ளார் தனது சாரதி அனுமதிப்பத்திரம் தொலைந்தபின் அதை இராணுவ உதவியுடன் புதிதாகப் பெற்றுக்கொண்டுள்ளார்

5. வடபகுதியிலிருந்து செல்லும் லொறிகளை இராணுவம் தமது தேவைக்காக வாங்கிச் செல்லும்போது அவற்றை தனது செல்வாக்கின் மூலம் குறுகிய நாட்களில் திருப்பியெடுத்து உரிமையாளர்களிடம் ஒப்படைத்துவிட்டு அதற்குப் பிரதியுபகாரமாக லொறி உரிமையாளர்களிடம் பணம் வாங்கியுள்ளார். அத்துடன் தனது தேவைகளுக்காக இராணுவ உளவாளிகளிடம் சிறுதொகைப் பணமும் பெற்றுவந்துள்ளார்.

(இ)

ஆவரங்கால் விவசாயிகளால் 13 - 06 - 93 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடத்தப்பட்ட

### மாட்டுவண்டிச் சவாரி போட்டி முடிவுகள்

A பிரிவு

முதலாமிடம் :- S மதிஸ்சன் - சண்டிலிப்பாய்
இரண்டாமிடம் :- ம. பிரதீபன் (பஞ்சு) - சுன்னாகம்
மூன்றாமிடம் :- ச. பிரதீபன் - சங்குவேலி வடக்கு

B பிரிவு

முதலாமிடம் :- தா. முத்துக்குமாரு - வட்டுக்கோட்டை
இரண்டாமிடம் :- க. சிவஞானம் - அளவெட்டி
மூன்றாமிடம் :- சோ. மகாலிங்கம் - வட்டுக்கோட்டை

C பிரிவு

முதலாமிடம் :- க. செல்வரத்தினம் - மானிப்பாய் வடக்கு
இரண்டாமிடம் :- க. சிதம்பரம்பிள்ளை - வட்டுக்கோட்டை
மூன்றாமிடம் :- க. செல்வேந்திரராசா - ஆவரங்கால்

போட்டி அமைப்பாளர்
பொ. தட்சணாமூர்த்தி

(5961)

யாழ். பிரிவு செஞ்சிலுவைச் சங்கம், திருமறைக் கலா மன்றத்துடன் இணைந்து வழங்கும்

### கலை நிகழ்ச்சிகள்

காலம்: 18-06-1993 வெள்ளி மாலை 4-00 மணி
இடம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
நிகழ்ச்சி:

★ இன்னிசை மழை ★

காலம்: 20-06-1993 ஞாயிறு மாலை 3-30 மணி
இடம்: யாழ். சம்பத்தரிசியார் மதுரம் அரங்கு
நிகழ்ச்சி

நெஞ்சக் கனகல்
[நவீன நாடகம்]

★ இசை மழை ★

அன்பளிப்பு: ரூ.50 ரூ.25 ரூ.20 ரூ.15

குறிப்பு: 19-06-1993 யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற தயாராகி இருந்து ரத்துச் செய்யப்பட்ட இசை மாலை நிகழ்ச்சிக்கென விற்கப்பட்ட பிரவேசச் சீட்டுகள் 18-06-1993 நிகழ்ச்சிக்கு பயன் படுத்தலாம்.

யாழ். பிரிவு
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

(26125)

# குமாரி கப்பல் சேவை அரசு இடைநிறுத்துகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 17

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்குப் பொருள்களை ஏற்றிவரும் பணியில் ஈடுபட்டிருந்த 'குமாரி' கப்பலின் சேவையை இடை நிறுத்துவதற்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்துவிட்டு நேற்று முன்தினம் திருகோணமலை சென்ற "குமாரி" இனிமேல் வேறு சேவைகளில் ஈடுபடுத்தப்படும் என அறியப்படுகிறது.

### "நில்கிரி"க்கு பதிலாக மத்றானா

புனர்வாழ்வு அமைச்சு சேவையில் ஈடுபடுத்தியுள்ள இரண்டாவது கப்பலான "வாதுவ" தொடர்ந்து சேவையில் ஈடுபடுமா இல்லையா என்பது குறித்து தகவல் எதுவும் இல்லை.

பருத்தித்துறைக்கு இதுவரை மண்எண்ணெய் ஏற்றி வந்த "நில்கிரி" கப்பலின் சேவையும் நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாகப் புதிதாக "மத்றானா" என்ற கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது.

"மத்றானா" 750 பரல் மண்எண்ணெயுடன் நேற்றுக் கொழும்பில் இருந்து புறப்பட்டதாகத் தெரியவந்தது

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வாடகைக்கு அமர்த்தியுள்ள "குமண" கப்பல் தொடர்ந்து பொருள்களை ஏற்றி வரும் சேவையில் ஈடுபடும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை நாளை பருத்தித்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் "குமண"வில் 3 ஆயிரத்து 200 மெற்றிற் தொன் பொருள்கள் எடுத்து வரப்படுவதாகவும்—

அவற்றில் இரண்டாயிரம் மெற்றிக் தொன் பொருள்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உரியவை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-3)

## அரசின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
னாண்டோவின் கோரிக்கையை யுத்தக் கைதிகள் நிராகரித்தனர்.

இது குறித்து உண்ணாவிரதமிருக்கும் பொலீஸ் கான்ஸ்டபிளான பி. எஸ். பி. பண்டார கூறியதாவது:—

வால்டர் பெர்னாண்டோ தெரிவித்ததாக பத்திரிகைகளில் வெளியான செய்திகளை ஏற்று நாம் உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை.

முன்னரும் பத்திரிகைகளில் எம்மை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக செய்திகள் வெளியாகின. ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை.

எனவே அரசின் உறுதிமொழி அரசின் பத்திரிகை மூலம் அல்லது அரசின் வானொலி போன்ற கருவி மூலம் அரச அறிவிப்பாக வெளிவர வேண்டும்.

அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நேரடியாகப் பேசி, ஒரு சாதகமான முடிவு ஏற்பட்டு, அந்த முடிவை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மூலம் எமக்கு அறிவித்தால் நாங்கள் உண்ணாவிரதத்தை கைவிடத் தயார்.

எம்மை விடுவிக்க ஏழு தினங்கள் அவகாசம் கொடுத்துள்ளோம். ஆகவே அரசுக்குப் போதிய நாட்கள் உள்ளன.

அதற்குள் அரசு விடுதலைப் புலிகளுடன் பேசி சாதகமான முடிவை எடுக்க முடியும்.

இக்கால அவகாசத்துக்கு இன்னும் மூன்று நாட்களே உள்ளன. அதன் பின் நாங்கள் தண்ணீர் கூட அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடருவோம். — என்றார்.

(உ-162)

## வவுனியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
இதனைத் தொடர்ந்து வன்னி மாவட்டத் தளபதி திரு. கபிலன் உத்தியோக பூர்வமாக காவல் பணிமனையைத் திறந்து வைத்தார்.

காவல் பணிமனை திறப்பு விழா நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூக்கிய உறுப்பினர்களும், ஏராளமான பொது மக்களும் கலந்து கொண்டனர். தமிழீழ காவல் துறையினரின் 'பாண்ட்' வாத்தியத்துடன் இந்த நிகழ்ச்சி இனிதே முடிவடைந்தது

பணிமனை திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏராளமான பொது மக்கள் தமது முறைப்பாடுகளை பதிவு செய்தனர். இப் பணிமனை திறக்கப்பட்டது மூலம் இப் பிரதேச மக்களின் நீண்ட நாள் அபிலாசைகள் தமிழீழதேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பணிமனை பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு 24 மணி நேரமும் செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நரசிம்மராவ் பதவி விலகவேண்டும்

### பாரதீய ஜனதா கோரிக்கை

பிரதமர் நரசிம்மராவ் உடனே பதவி விலகவேண்டும். பாரதீய ஜனதாக் கட்சி இப்படி கோரிக்கை விடுத்தது. பம்மாய் பங்குச் சந்தை பேர ஊழலின் சூத்திரதாரியான ஹர்ஷத்மேத்தாவின் குற்றச்சாட்டைத் தொடர்ந்து முன்கண்ட கோரிக்கை விடப்பட்டது. (இ-எ)

# நாவற்குடாவில் படையினர் பதுங்கியிருந்து தாக்குதல்

### போராளி ஒருவர் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் நாவற்குடா என்ற இடத்தில் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.

கடந்த 10 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது

இதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் அற்புதகாந்தன் அல்லது அற்புதன் என அழைக்கப்படும் 2 ஆம் குறுக்குத்தெரு மட்டக்களப்பைச் சேர்ந்த கணேசமூர்த்தி கமலகாந்ன் வீரச்சாவடைந்தார்.

(இ-162)

## கொழும்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அகதிக் குடும்பங்கள், 1990 ஜூனில் யுத்தம் வெடித்த பின்னர் கிழக்கில் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி கொழும்பு அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் அகதிக் குடும்பங்களின் உண்ணாவிரதம்குறித்து, சமூக சேவைகள் பணிப்பாளர் என். டபிள்யூ ஈ. விஜேவர்தன கருத்துத் தெரிவிக்கையில்—

அகதிகள் உண்ணாவிரதம் இருப்பது துரதிர்ஷ்டமானது —என்றார்.

தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர இந்த அகதிகள் முதலில் இணங்கி இருந்தனர் தற்போது இவர்கள் மனம் மாறி இருப்பதால் எவராவது இவர்களைத் தூண்டி இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

## பிரதமர் ராவ்...

(1ஆம் பக்கம் பார்க்க)
டைத் தெரிவித்தார்.

தாம் நரசிம்மராவுக்கு ஒரு கோடி ரூபாவை 1991 ஆம் ஆண்டு நவம்பரில் கொடுத்ததாக நேற்று செய்தியாளரிடம் அவர் தெரிவித்தார்,

4-11-1991 இல் 67 லட்சம் ரூபாவும், 5-11-1993 இல் 33 லட்சம் ரூபாவும் பிரதமர் ராவிடம் தம்மால் அவரது இல்லத்தில் வைத்து வழங்கப்பட்டது என்றும் —

1991 இடைத் தேர்தலில் பிரதமர் ராவ் போட்டியிட்டபோது அவரின் தேர்தல் செலவுகளுக்காக இப்பணம் வழங்கப்பட்டது என்றும் —

ஹர்ஷாத் மேத்தா பம்பாய் தாஜ் ஹோட்டலில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்,

பிரதமர் நரசிம்மராவ் அரசைக் கவிழ்க்கும் எண்ணத்தில் இக்குற்றச் சாட்டு சுமத்தப்படவில்லை என்றும் —

பிரதமர் இதனை மறுப்பின் இக்கொடுப்பனவுக்கான ஆதாரங்கள் வெளியிடப்படும் என்றும்—மேத்தாவின் வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி தெரிவித்தார்.

ஐயாயிரம் கோடி ரூபா பம்பாய் பங்குச் சந்தை பேர ஊழலின் சூத்திரதாரி என்று மேத்தா குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். (இ-எ-163)

## ராவ் பதவி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்திரா காங்கிரஸில் உள்ள நரசிம்மராவ் அதிருப்தியாளர்கள் ராவைப் பதவியில் இருந்து வெளியேற்றும் முயற்சியை மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளனர் என்று பி. பி. சி வானொலி அறிவித்தது.

அதேசமயம் ஓமான் நாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பிய பிரதமர் பி. வி. நரசிம்மராவ், இந்திரா காங்கிரஸ் கட்சியின் உயர் தலைவர்களின் மாநாடு ஒன்றை அவசரமாகக் கூட்டினார்

ஓமானில் இருந்து புதுடில்லி திரும்பிய பிரதமர் நரசிம்மராவ் சம்பிரதாய வரவேற்பில் கலந்து கொள்ளாமல் நேராக தமது இல்லத்துக்குத் திரும்பி இருந்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.